**கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை**

**சட்ட பீடம்**

**சட்டமாணிப் பரீட்சை, ஆண்டு – III, 2019**

**தீங்கியற் சட்டம்**

(மூன்று மணித்தியாலம்)

வினாக்களின் மொத்த எண்ணிக்கை: **07**

எவையேனும் **நான்கு (04)** வினாக்களுக்கு **மட்டும்** விடையளிக்க.

(தெளிவற்ற கையெழுத்துக்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.)

---

1. " தமக்கேயுரியதான தேவைப்பாடுகளையும் பரீட்சிப்புக்களையும் கொண்டவையான சட்டமுரணானதன்மை மற்றும் கவனயீனம் ஆகிய இரண்டுமே வேறுபாடானதும் வெவ்வேறானதுமான ஒரே தீங்கியலின் இரு கூறுகளாகும். ஆகையினால் அவை சிக்கலாக்கப்படவோ அல்லது ஒன்றிணைக்கப்படவோ கூடாது."

   *Administrateur, Transvaal v. Van der Merwe* 1994 (4) SA 347 (A) at 364

   மேற்போந்த கூற்றுடன் நீர் உடன்படுகின்றீரா? அக்கூலியன் வழக்கின் இரு மூலகங்கள் தொடர்பான சமகால நீதிமுறை அதிகார அதிகாரங்கள் மற்றும் கோட்பாடுகளின் பின்னணியில் ஆராய்க.

2. 'ஏபிசி பாங்க் பிஎல்சி' (ABC Bank Plc) இனுடைய வங்கி நிறைவேற்று அதிகாரப் பதவிக்கான இறுதிப் போட்டியாளர்களுள் ரொஹான் என்பவனும் ஒருவனாவான். இறுதி நேர்முகத் தேர்வுக்கான தினத்தன்று, ரொஹான் தன்னுடைய வேஹன்ஆர் VXI (WagonR VXI) இனை 'ஏபிசி பாங்க் பிஎல்சி' இனுடைய தலைமையகத்திற்கு ஓட்டிச் சென்றான். வாகனத் தரிப்பிற்கென ஒதுக்கப்பட்ட பகுதியில், பாதுகாப்பு அலுவலரின் உதவியுடன் அவன் தனது காரினை நிறுத்தி வைத்தான். நேர்முகத் தேர்வினைப் பூர்த்தி செய்ததன் பின்னர் உடனடியாகவே வாகனத் தரிப்பிடத்திற்கு அவன் திரும்பி வந்தான். அவனுடைய காரின் முன்முனைப் பகுதியானது மோசமாகச் சேதமடைந்துள்ளமையினை அவன் அவதானித்தான். பொதுவாக வேறு எவரும் நிறுத்துவதற்கு அனுமதிக்கப்படாதும் தலைமை நிர்வாக அதிகாரியின் வாகனம் நிறுத்துவதற்கென ஒதுக்கப்பட்டதுமான பகுதியினை அவன் பாவித்திருந்ததாக வாகன

நிறுத்துமிடத்திலுள்ள ஊழியர்கள் அவனைக் குற்றஞ் சாட்டினர். மேலும், தன்னுடைய முதலாளிக்கு எவ்வித காலதாமதமும் ஏற்படாமல் இருக்க வேறொரு வாகன தரிப்பிடப் பகுதியில் வாகனத்தினை நிறுத்துவதற்காக தலைமை நிர்வாக அதிகாரியின் வாகன ஓட்டுனர் வாகனத்தினைப் பின்னோக்கிச் செலுத்திய போதே சேதம் ஏற்பட்டதாக அவர்கள் ரொஹானுக்குத் தெரிவித்தனர். வாகனத் தரிப்பானது வாகனச் சொந்தக்காரரின் இடரேற்பிலேயே அனுமதியளிக்கப்படுவதாக, வாகன நிறுத்துமிடத்தின் உள்வாயிலில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவிப்பினைச் சுட்டிக்காட்டி, 'ஏபிசி பாங்க் பிஎல்சி' இனுடைய நிர்வாக ஊழியர்கள் ரொஹானுக்கு விளக்கமளித்தனர். அவனுடைய காருக்கு ஏற்பட்ட சேதத்தினைத் திருத்துவதற்குக் கம்பனி பொறுப்புடையதாகாது எனவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

தனக்கு ஏற்பட்ட இழப்பிற்காக 'ஏபிசி பாங்க் பிஎல்சி' இற்கு எதிராக வழக்கிடுவதற்கு ரொஹான் விரும்புகின்றான். பொருத்தமான தீங்கியல் (Delict/Tort) கோட்பாடுகளை ஆதாரங்காட்டி அவனுக்கு ஆலோசனை வழங்குக.

3. (அ) *Bolitho vs. City Hackney Health Authority* வழக்கில் ஏற்றுக் கொள்ளப்பட்ட சட்ட நிலைப்பாட்டுக்குப் புறம்பாக, மருத்துவக் கவனயீன வழக்கின் வழக்காளிகளுக்கு Bolam பரீட்சிப்பானது அகற்ற முடியாத தடையொன்றாக இருந்து வருகின்றது. நீர் உடன்படுகின்றீரா? உமது வாதத்தினைப் பொருத்தமான தீர்ப்புச் சட்டத்தினால் ஆதாரப்படுத்துக.

(12.5 புள்ளிகள்)

(ஆ) 'உரிமைகள் அடிப்படைசார் அணுகுமுறை' ஆனது எவ்விதம் சமகால நியாயாதிக்கங்களில் மருத்துவக் கவனயீனம் தொடர்பான சட்டத்தினை வடிவமைத்துள்ளது என்பதனைப் பொருத்தமான நியதிச்சட்ட அதிகாரங்களையும் தீர்ப்புச் சட்டத்தினையும் ஆதாரங்காட்டி ஆராய்க.

(12.5 புள்ளிகள்)

4. மிஹிரி என்பவள் சினிமா உலகில் தனது பெயரினைப் பிரபல்யப்படுத்தும் அபிலாசை கொண்டுள்ள தொழில் முறைப் பாடகி ஒருவளாவாள். உலகளாவிய ரீதியில் அதிகம் பார்க்கப்படுகின்றதான Dream TV இனுடைய பாட்டுப் போட்டியில் அவள் பங்கேற்றாள். அனைத்து நாடுகளிலும் அந்நிகழ்ச்சிகள் நேரலையில் ஒளிபரப்பப்படுகின்றன. தேர்ந்து பட்டியலிடப்பட்ட முதல் 25 போட்டியாளர்களுள் மிஹிரியின் பெயரும்

உள்ளடங்கியிருந்தது. போட்டியின் அடுத்த கட்டத்தில் பங்கேற்பதற்கான பத்துப் பங்கேற்பாளர்களினைத் தெரிவு செய்வதற்கு ஏற்பாட்டாளர்கள் தீர்மானித்த அப் போட்டியின் 10 ஆவது சுற்றில், திரைப்படத்துறை இசையமைப்பாளருளொருவனான திரு. சுகத் என்பவன், பிரபல்யம் மிக்க வேறு இரு பெண் பாடகிகளுடன், நீதிபதியாக அழைக்கப்பட்டிருந்தான். மிஹிரியின் அளிக்கையினைக் கண்ணுற்றதன் பின்னர், திரு சுகத் சிரித்ததுடன் கிண்டலாகக் கருத்துரைத்தான்: 'உன்னுடைய பாடும் திறன் தொடர்பில் நீ பெருமை கொள்ள வேண்டும்'. அந்தச் சுற்றின் இறுதியில் மிஹிரி வெளியகற்றப்பட்டாள். இதனைத் தொடர்ந்து, மிஹிரியின் பாடும் திறனையும் திரைப்படங்களில் இணைந்து கொள்வது தொடர்பான அவளின் ஆழ்விருப்பினையும் ஏளனஞ் செய்து கேளிக்கைக்குட்படுத்திய இணையத்தள கருத்துப்பரிமாற்றங்கள் ஏராளமாகச் சுற்றிவரத் தொடங்கிற்று.

திரு சுகத்தின் நடத்தையானது மிஹிரி தொடர்பில் அவன் கொண்டிருந்த காழ்ப்புணர்ச்சியினால் உந்தப்பட்டதாக மிஹிரி வலுவாக நம்புகின்றாள். அவனுடைய மகளான காவ்யா என்பவளை விட தான் பொதுப் பரீட்சைகளில் அதிகளவான வெற்றியினை ஈட்டியிருந்தமையே இந்த வெறுப்பு வளர்வதற்கான காரணம் என அவள் நினைக்கின்றாள்.

திரு சுகத்துக்கும் Dream TV இனுடைய முகாமைத்துவத்துக்கும் எதிராக அவதூறுக்கான வழக்கொன்றினைக் கொண்டுவருவதற்கான சாத்தியப்பாடுகள் தொடர்பில் மிஹிரிக்கு ஆலோசனை வழங்குக.

5. டானியல் என்பவன் சுவையூட்டிகள் வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள ஒருவனாவான். பதினைந்து வருட உயர்தொழில் அனுபவமுடைய போர்ட்போலியோ (portfolio) முதலீட்டு ஆலோசகரான விமல் என்பவனின் ஆலோசனையினைத் தொடர்ந்து 'சுமுது பிஎல்சி' என்பதன் பங்குகளில் ரூபா 3 பில்லியனை அவன் முதலீடு செய்தான். டானியல் தனது முதலீட்டினை செய்ததனை உடனடுத்து 'சுமுது பிஎல்சி' இன் பங்கு விலைகள் சரியத் தொடங்கின. அதன் விளைவாக, 'சுமுது பிஎல்சி' ஆனது ஒரு நாளுக்குள்ளாகவே வங்குரோத்தடைந்ததாக விளம்பப்பட்டது. தனது முகவரிடமிருந்து தொலைபேசி அழைப்பொன்றின் ஊடாக அத்தகவலினைப் பெற்றுக் கொண்டதன்மேல் டானியல் மயக்கமடைந்ததுடன் உடனடியாகவே மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லவும்பட்டான். மருத்துவர்கள் அவனைப் பரிசோதித்ததுடன் அவனுக்கு முடக்குவாதம் ஏற்பட்டுள்ளதாகவும் அதன் விளைவாக அவனது இடதுபக்க உடலானது முடக்கப்பட்டுள்ளதாகவும் அவனுக்குத் தெரிவித்தனர்.

தூய பொருளாதார நட்டம் மற்றும் நரம்பு மண்டலத் தாக்கம் என்பவற்றுக்காக விமலுக்கு எதிராக வழக்குக் கொண்டு வருவதற்கான சாத்தியப்பாடுகள் தொடர்பில் டானியல் உமது ஆலோசனையினை நாடுகின்றான். பொருத்தமான அதிகார ஆதாரங்களை சான்றாதாரங்காட்டி அவனுக்கு ஆலோசனை வழங்குக.

6. சமன் என்பவன் நாளொன்றின் 24 மணித்தியாலங்களும் திறந்திருக்கும் Green City சூப்பர்மார்க்கெட் என்பதன் சொந்தக்காரனாவான். அந்த சூப்பர்மார்க்கெட்டினைச் சுத்திகரிக்கும் பொருட்டு அவன் மாஸ்டர் கிளீனர்ஸ் பிரைவேட் லிமிட்டெட் (Master Cleaners Pvt Ltd) நிறுவனத்தினைப் பணிக்கமர்த்தினான். சுத்திகரிப்பாளர்கள் எட்டு மணித்தியால பணிநேர அடிப்படையில் வேலை செய்ய வேண்டும் என சேவை ஒப்பந்தம் குறிப்பிடுகின்றது. தரையில் எதுவும் சிந்தியிருக்கவில்லை என்பதனை உறுதிப்படுத்தும் பொருட்டு அவர்கள் ஒவ்வொரு 30 நிமிடங்களுக்கும் வளாகத்தினைச் சோதிக்க வேண்டும் என தேவைப்படுத்தப்பட்டனர். 17 ஒக்டோபர் 2018 அன்று, சமையல் எண்ணெயினைக் கொள்வனவு செய்வதற்காக ரமணி என்பவள் Green City சூப்பர்மார்க்கெட்டிற்குச் சென்றாள். தனது மகளைப் பாடசாலையிலிருந்து கூட்டி வருவதற்கு ஏற்கனவே காலதாமதமாகியிருந்ததால் அவள் ஒரு போத்தல் சமையல் எண்ணெய் எடுப்பதற்காக சமையலுக்கான அத்தியாவசியப் பொருட்கள்' பிரிவிற்கு விரைந்து சென்றாள். சமையல் எண்ணெய் காட்சிப்படுத்தப்பட்டிருந்த தட்டு அடுக்கினை அண்மித்த போது, தரையில் சிந்தியிருந்த எண்ணெயில் வழுக்கி விழுந்தாள். அதன் விளைவாக, அவள் தலையில் கடுமையான காயத்திற்குள்ளானதுடன் ஆறு மாதங்களுக்கு படுக்கையில் ஓய்வெடுக்கும்படியும் நிர்ப்பந்திக்கப்பட்டாள். இந்தச் சம்பவத்தினைத் தொடர்ந்து, விசாரணையொன்றினை முன்னெடுத்த சமன், 17 ஒக்டோபர் 2018 அன்று 'சமையலுக்கான அத்தியாவசியப் பொருட்கள் பிரிவின் சுத்திகரிப்பானது ராஜா என்பவனுக்கு ஒதுக்கப்பட்டிருந்ததைக் கண்டறிந்தான். CCTV காட்சிகளினைப் பரீட்சித்த சமன் எண்ணெயானது 45 நிமிடங்களாக தரையில் சிந்தப்பட்டிருந்தது என்பதனைக் கண்டறிந்தான்.

தனக்கு ஏற்பட்ட ஊறுகளுக்கு நஷ்டஈட்டினைக் கோரி சட்ட நடவடிக்கை எடுக்க ரமணி விரும்புகின்றாள். அவள் வழக்கு கொண்டுவரத்தக்கதான சாத்தியமான எதிர்வாதிகள் தொடர்பில் பகரப் பொறுப்புக் கோட்பாட்டின் பின்னணியில் ரமணிக்கு ஆலோசனை வழங்குக. உமது வாதங்களினைப் பொருத்தமான தீர்ப்புச் சட்டத்தினால் ஆதாரப்படுத்துக.

7. அபாயகரமான நடவடிக்கைகளினை கேள்விக்குட்படுத்துவதுக்குச் சட்ட முறைமைகள் வெவ்வேறு வழிகளில் பதிலளிக்கின்றன. சட்ட முறைமைகள் சில கடும் பொறுப்புக் கோட்பாட்டினைச் சுமத்துகின்ற அதேவேளையில், மற்றைய முறைமைகள் தவறுசார் பொறுப்புடமையினைச் சுமத்துகின்றன.

நவீன சட்ட முறைமைகளில் அபாயகரமான செயல்கள் மற்றும் பொருட்கள் செலுத்துகின்ற தாக்கத்தினை கவனத்திற் கொண்டு பொறுப்புடமை தொடர்பில் மேற்போந்த வெவ்வேறு அணுகுமுறைகளினை ஆராய்க. அபாயகரமான செயல்கள் மற்றும் பொருட்களினைக் கையாள்வது தொடர்பில் எந்த அணுகுமுறையானது உமது கருத்தில் மிகவும் பொருத்தமானது? உமது வாதத்தினை பொருத்தமான தீர்ப்புச் சட்டம் மற்றும் நியதிச் சட்டங்கள் என்பவற்றினைச் சுட்டிக்காட்டுவதன் மூலம், இலங்கை தவிர வேறேதேனுமொரு நியாயாதிக்கத்துடன் ஒப்பீடு செய்து ஆதாரப்படுத்துக.

*****